[திரு. வெ. பொன்னுப்பாண்டி] [2011 ஜூன் 9

மேலும், அரசு அறிவித்துள்ள திட்டங்கள் அனைத்தும் மக்களுக்குச் சென்றடைகின்ற வகையிலே திட்டம் மற்றும் செயலாக்கத் துறை என்ற புதிய துறையை உருவாக்கி அதற்குத் தனியாக அமைச்சர் ஒருவரையும் நியமித்துள்ளது, இந்த அரசின் செயல்பாடு அறிவிப்போடு இல்லாமல் செயல்படுத்துவதிலும் உறுதியாக இருக்கும் என்பதற்கு இது சான்றாக விளங்குகின்றது.

அறிக்கையிலே, தொழில் வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடுக்கும் விதமாக, தனியார் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கின்ற விதம் சொல்லப்பட்டிருக்கின்றது. இதில் வெளிநாட்டு முதலீட்டில் தொழிற்சாலைகள் தொடங்கும்போது, தமிழக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பிலே, முன்னுரிமை கொடுப்பதை உத்தரவாதப்படுத்துவதோடு, தொழிலாளர் நலன்களைப் பாதுகாக்கின்ற வகையில், தொழிற்சங்கம் அமைத்துக்கொள்கின்ற உரிமையையும் உத்தரவாதப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த ஆட்சியில் கேட்டவர்களுக்கெல்லாம் நல வாரியம் தொடங்கப்பட்டது. அந்த வாரியங்கள் எல்லாம் தற்போது முடங்கிப்போய் உள்ளன. எனவே, புதிய அரசு வாரியங்களைச் செயல்படுத்துகின்ற வகையில், குறிப்பாக விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுடைய நலன்களைப் பாதுகாக்கின்ற வகையிலே அந்த வாரியங்களை முழுமையாகச் செயல்படுத்திட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (10—6—2011) வெள்ளிக்கிழமை காலை 10—00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2—21 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

5. 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 15/2009) 1.9.2009 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 20.8.2009 ஆம் நாளிட்ட

2011 ஜூன் 9] [திரு. வெ. பொன்னுப்பாண்டி]

150 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு மற்றும் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

—ஏதுமில்லை—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS